**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**STC. No. 61/2022 PW . 7**

| | |
|---|---|
| **பெயர் : பிரபு** | **தந்தை/கணவர் பெயர்: ராமன்** |
| **ஊர் :** | **தாலுகா:** |
| **வயது :** | **தொழில்:** |
| **ஜாதி :** | **சமயம்:** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.06.2025

---

**(எதிரி ஆஜர்).**

**30.06.2025 முதல் விசாரணை:**

1. நான் தற்போது இடையப்பபடடியில் வசிக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். 2021ம் வருடம் எதார்த்தமாக கரிசல்பட்டி அம்மன் கோவில் அருகே நான் சென்ற போது போலீசார் வந்து கையொப்பம் பெற்றார்கள். எதற்காக என்று தெரியாது. எதற்காக கையொப்பம் கேட்கிறீர்கள் என்று நான் போலீசாரிடம் கேட்டதற்கு சாட்சிக்காக என்று சொல்லி பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

2. கடந்த 17.09.2021ம் தேதி காலை 7 மணிக்கு கரிசல்பட்டி கிராமம் துவரங்குறிச்சி – பொன்னமராவதி தார் சாலையில் உள்ள சம்பவ இடத்தை புழுதிப்பட்டி சார்பு ஆய்வாளர் என் முன்னிலையிலும் வெள்ளைச்சாமி முன்னிலையிலும் பார்வையிட்டு மாதிரி வரைபடம் , பார்வை மகசர் தயார் செய்து அதில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்து விட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.**